கைத்தறி

ஆசிரியர்: எம். கே. சாமி.

மாதப் பத்திரிகை ★ விலை அணா நான்கு

தறி 2	கோவை, 15—6—1951	பாவு 8

X9B(M7)m21L N49
9151
CONNEMARA PUBLIC LIBRARY
29 MAY 195

இந்த இதழில்

○ தொழில் மந்திரியின் தைரியம்.

○ மில்லில் நூலைக் கட்டாயக் கொள்முதல் செய்க!

○ பொது மக்களுக்குத் துணி கிடைக்க........!

○ சாய அச்சுத் தொழிலுக்கு விற்பனை வரி கூடாது!

போலித் தறிகள் ஒழிய?

நூல் நெருக்கடி பிரமாதமாக இருந்துவருவதற்கு, ராஜ்யத்தில் போலித் தறிகள் அதிகரித்துப் போனதும் ஒரு காரணம் தான் என்று சொல்லப்படுவதை நேயர்கள் அறிவர். இது வாஸ்தவம் தானா என்பதை நாம் ஆராய்வதும், போலித் தறிகள் ஒழிக்கப்பட முழு முயற்சியும் எடுத்துக் கொள்ள அங்கங்கே உள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்களும் சர்க்காரும் என்னசெய்யவேண்டுமென்பதையும் சற்று ஆராய்ந்து பார்க்கலாம்.

மாகாணத்தில் போலித் தறிகள் அதிகரித்துள்ளதை இல்லையென்று நியாய புத்தியுள்ள எவரும் மறுக்க மாட்டார்கள். இப்படிப் போலித் தறிகள் அதிகமானதற்குக் காரணம், உண்மைத் தறிகளுக்கு வேலை செய்யப் போதுமான நூல் கிடைக்காததும், நூலுக்குக் கிடைக்கும் கள்ளமார்க்கெட் அதிகவிலையுமே தான் காரணங்கள் என்பது நடைமுறை உண்மை.

போலித் தறிகள் அதிகமான

லெழுந்த காரணங்களே. ஆனால் உண்மையான அடிப்படை காரணம் சர்க்காரின் டெக்ஸ்டைல் கொள்கைதான் என்பது ஏற்கனவே "கைத்தறி"யில் நாம் பல தடவைகளில் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

நம் மாகாணத்திற்கு ஒதுக்கப்படுகிற நூல் கோட்டா போதுமானதல்ல. இருப்பினும் கிடைக்கிற நூலையாவது ஒழுங்காக வினியோகிக்க வேண்டுவது சர்க்காரின் கடமையாகிறது. எனவே ஒரு சரியான தறிக் கணக்கெடுத்து, அந்த கணக்கின்படி உள்ள தறிகளுக்கு நூல் கூப்பன்கள் வழங்கி, நூல்வினியோகம்செய்ய ராஜ்யமெங்கும் நூல் ஆலோசனைக்கமிட்டிகளை அமைத்தார்கள்.

இந்த கமிட்டிகள் அமைக்கப்பட்ட போது கவனத்தில் எடுத்துக்கொண்டது 1947-ம் ஆண்டு நூல் கண்ட்ரோல், வினியோக காலத்திலிருந்த பழைய தறிகளையே கணக்கெடுத்து அவைகளுக்கு நூல் கூப்பன்கள் கொடுக்க வேண்டுமென்பதைத்தான். பிறகு கைத்தறி நெசவாளர்களின் ஸ்தாபனங்கள் இடைவிடாது கிளர்ச்சிசெய்து நிர்ப்பந்தித்ததன் காரணமாக பல வாஸ்தவமான புதிய தறிகளையும் கணக்கில் சேர்த்துக் கொள்வதென்று அந்தந்த ஜில்லா அதிகாரிகள் இசைந்து கொடுத்தனர்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொண்டு தறியே இல்லாதவர்களும், இந்த தொழிலுக்கே சம்பந்தமில்லாதவர்களும் நூல் ஆலோசனைக் கமிட்டி அங்கத்தினர்களையும், ஸ்தல டெக்ஸ்டைல் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களையும் "எப்படியோ" சரிக்கட்டிக் கொண்டு நூல் கூப்பன்கள் பெற்று விட்டனர்.

புதிய தறிகள் போடுவது ஒரு சீஸன் வியாபாரமாகக் கூடப் போய் விட்டது. உதாரணமாக ஈரோட்டில் "மாடல் தறிகள்" (அதாவது பார்த்தால் தறிபோல் இருக்கும்; ஆனால் நெய்யாது) உற்பத்தி அதிகரித்து அது எங்

கைத்தறி நெசவாளர் ஸ்தாபனங்களைச்சேர்ந்தவர்கள் கூட இந்தத் திட்டங்களை வரவேற்றேயிருக்கின்றனர் என்பது தெளிவு. அதே காலத்தில் ஏதாவது குறை காணுவிடில் தங்களது அணியைத் திருப்திப்படுத்த முடியாதே என்பதற்காக ஏற்கனவே கைவசம் தேங்கியிருக்கும் ஜவுளித்தேக்கத்தைப்பற்றிக் கமிட்டி கவனிக்கத் தவறிவிட்டதெனகுறை சொல்லியிருக்கின்றனர்.

அவர்கள் உண்மையை மறைக்கின்றனர்; என்பதற்கு கீழ்வரும் செய்தியே பதில் கூறும்:-

“இப்போது தேங்கியிருக்கும் கைத்தறித் துணியை வெளிநாடுகளில் விற்பனை செய்ய—வெளிநாடுகளில் இருக்கும் இந்திய ஸ்தானிகராலயங்களில் உள்ள வர்த்தக ஆலோசகர்களுக்கு மத்திய சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனர்........கைத்தறி ஜவுளித்தேக்கம் சம்பந்தமாக சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரின் உதவியை நாடியது. இதன் பேரில் மத்திய சர்க்கார் இலாக்காக்கள் யாவும் சாத்தியமான வரை சென்னை ராஜ்ய கைத்தறித் துணிகளையே வாங்கி உபயோகிக்க வேண்டுமென உத்திரவிட்டுள்ளனர். சென்னை சர்க்காரும் தங்கள் இலாகாவினர் கைத்தறித் துணிகளையே வாங்கி உபயோகித்து ஊக்கமளிக்கும் வண்ணம் உத்திரவிட்டுள்ளனர்” என நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்ரமண்யம் அவர்கள் கூறியுள்ளார்.

கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் தேங்கியிருக்கும் ஜவுளி தானே சர்க்கார் கண்ணுக்குப் படுகிறது; வியாபாரிகள் கையில் உள்ள கைததறி ஜவுளித்தேக்கம் பற்றி கமிட்டியும்ராஜ்ய சர்க்காரும் மவுனம் சாதிக்கின்றனரே யெனச் சிலர் பலர் குறைபட்டுக் கொள்ளுகின்றனர். அதுபற்றி நிதியமைச்சர் மிகத் தெளிவாக -சந்தேகத்திற்கிடமின்றி “தனிப்பட்ட வியாபாரிகளிட முள்ள கைத்தறி ஜவுளியையும் சர்க்கார் குறைந்த விலையில் கொள்முதல் செய்து அவைகளை விற்கும்” எனக் கூறியிருக்கின்றனர்,

வெளி நாட்டில் மார்க்கெட் தேட

தவிர, கைத்தறி ஜவுளித்தேக்கத்தைத் தீர்க்க வெளிநாடுகளில் மார்க்கெட் தேடவும் ராஜ்ய சர்க்கார் ஒரு தூது அனுப்ப முடிவும் செய்திருக்கின்றனர். இதுபோன்று சாத்யமான எல்லாவழிகளிலும் நிவாரணம் தேட சர்க்கார் முன் வந்திருக்கிறது. இந் நடவடிக்கைகள் யாவுமே ராஜ்யத்தில் உள்ள கைத்தறித் தொழிலின் பல்வேறு ஸ்தாபனங்களும் கடந்த பல ஆண்டுகளாக வற்புறுத்தி வந்தவையேயாகும் என்பதையும் நாம் உணரவேண்டும்.

சுருங்கச் சொன்னால் மக்களின் ஆலோசனைகளுக்கு இன்றய ராஜ்ய சர்க்கார் மதிப்புக்கொடுத்து பிரச்னைகளை மக்கள்பாதையிலேயே தீர்க்க முன் வந்திருக்கின்றனர் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

நூல் விலை குறைய சிபார்சு

மேலும், ராஜ்யத்திலுள்ள எந்தவொரு ஸ்தாபனமும் தைரியமாக நூல் விலையை 1946-ம் ஆண்டு விலைக்குக் குறைக்கவேண்டும் என்று சொல்ல முன் வராத காலத்திலே, தமிழ் நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனம் மட்டும் தன்னந் தனியாக-தீர்க்க தரிசனத்தோடு கோஷித்து வந்தது.

அன்று, நூல் கிடைத்தால்போதும்; விலையைப்பற்றி கவலை யில்லையெனச் சொன்னவர்கள்-ஸ்தாபனங்கள்கூட இன்றுமார்க்கெட் நிலவரம் இறங்கிய பின் நூல் விலையைக் குறைக்க வேண்டுமென்ற கோஷத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். இப்படிப் பலரிடத்தும் வேரூன்றி விட்ட நூல்விலை குறைப்புப் பிரச்னை பற்றியும் ராஜ்ய சர்க்கார் ஏற்றுக்கொண்டு மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்திருக்கின்றனர்.

ராஜாஜியின் அரிய சேவை

எல்லாவற்றிற்கும் மேலாக ராஜாஜி அவர்கள் தான் செல்லுமிடங்களில் எல்லாம் பொது மக்களைக் கைத்தறித் துணியையே வாங்கி அணியுமாறும், கைத்தறியாளர்களின் பஞ்ச வாழ்வைப் போக்க மக்கள் முன் வந்து ஆதரவு தருமாறும் கோரியுள்ளார் அவரது வேண்டுகோள் நிச்சயம் பலனளிக்கும் என நாம் திடமாக நம்புகிறோம்.

வியாபாரிகள் பற்றிய விளக்கம் தேவை

“ஹைபவர்” கமிட்டியின்சிபாரிசுகள் அனைத்துமே வரவேற்கத்தக்கதாக இருப்பினும், தனது குறுகிய-நீண்டகாலத் திட்டங்களில் இன்றுவரை பல்லாண்டுகளாக கைத்தறி ஜவுளி உற்பத்தியிலும், வர்த்தகத்திலும்ஈடுபட்டு வந்துள்ளவர்களைப்பற்றி அவர்களின் எதிர்காலம் குறித்து அவர்களின் பங்கு-நிலை என்ன என்பதுபற்றி விளக்கம் தராமல் விடப்பட்டிருப்பதின் கருத்து என்ன என்று தான் தெரியவில்லை. அவர்களின் வர்த்தகத்திற்கோ, தொழிலுக்கோ எப்படிப் பட்ட பாதுகாப்பு அளிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர் என்பதும் துலாம்பரமாக்கப்படவில்லை.

உத்திரவாதமான
கெட்டிச்சாயம்
தோய்ப்பவர்கள்
மதராஸ்
ராஜ்யகைத்தறிநெசவாளர்
கூட்டுறவு சங்கத்திடம்
அங்கீகாரம்பெற்றவர்கள்
ஸ்ரீஜெயலட்சுமி
கலர் ஒர்க்ஸ்
சுப்ரமணியசெட்டிவீதி, திருப்பூர்
DASS

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

ஏதேதோ என் உள்ளக் குமுறலை எழுதிப் போகிறேன் என்று நினைத்து விடாதே நண்பா! இருள் தேவதை என்னை நோக்கி ஓடி வருகிறாள்! அதனின்று தப்புவதற்காக இக்கடிதத்தினை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்! வணக்கம்!

இப்படிக்கு, உன் நண்பன்,
"ஞானோ"

இன்று, தமிழ் நாட்டு நெசவாளி ஒருவன் ஓடுகிறான் ஊர் விட்டு நாடு விட்டு—அயல் நாட்டில் ஆந்திர நாட்டில் அடைக்கலம் புகுகிறான். பொழுது அவனைக் கேலி செய்கிறது - தரித்திர தேவதையின் கண்ணில் படாமல் அங்கு க்ஷவரத்தொழிலை மேற்கொண்டுள்ளான்!

இது என் — நெசவாளியின் நெஞ்சக்குமுறலோ, கதையோ, சட்டுரையோ, கற்பனையோ அல்ல 'தினத் தந்தி' தரும் குறிப்புக்கள்.

இதுமட்டுமா! வாருங்கள் சற்று விருதுநகருக்கு. வெளியேறுங்கள் ரெயில்வே ஸ்டேஷனை விட்டு, நீங்கள் காண்பீர்கள். அகதிகளை அங்குள்ள சிறு சிறு சத்திரத்திலும், திறந்த வெளியிலும். அவர்களில் அனேகர் நெசவாளிகள்.

சற்று தயை செய்து நீங்கள் மோட்டாரில் ஏறியிருக்கும் போது பாருங்கள் - கேளுங்கள்- அனேகரின் வாயிலிருந்து வெளி வரும் நெசவாளிகள் என்று. எல்லோரையும் கேட்டு விடாதீர்கள்—உங்களை நாடி வருபவர்களை—உங்களைத் தேடி வருபவர்களை அதாவது ஐயா! பசிக்குதே என உம்மிடம் கெஞ்சியழும் பிச்சைக் காரனைத்தான்.

ஏன் இக்கதி! நெசவாளர்களுக்கு! உலகமெல்லாம்உயர்ந்த புடவை நெய்தவன் அவன் முன்னோர்! ஊர் ஊராகப் பிச்சை எடுக்கிறான் அம்முன்னோர் வழி வந்த பின்னோர்! பெற்ற பிள்ளையைப் போற்றி வளர்த்து பாராட்டித் தாலாட்டினார்கள் முன் கால நெசவாளர்! பெற்ற பிள்ளையை விலைக்கு விற்கிறான் இக்காலநெசவாளி! நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை என சங்கொலித்தது முற்காலத்தில், 'நெய்யுந் தொழிலை நிந்திப்போம்' என எக்காளமிடுகின்றனர் இக்காலத்தில்! தன் மானத்துடன் தன் ஊரில் வாழ்ந்தான் தமிழ் நெசவாளி அன்று. மானமிழந்து ஊரை விட்டு ஓடுகிறான்—உழலுகிறான் தமிழ் நெசவாளி இன்று! காரணம் என்ன? நெசவாளர்களே! தோழர்களே! நீங்கள் அறியாததா இது! நீங்கள் அறிவீர்கள் அன்றும் இன்றும்!

துருக்கியில் சர்வதேச விழா.

துருக்கியிலுள்ள இஸ்மீர் என்னுமிடத்தில் இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் 20 தேதி முதல் செப்டம்பர் மாதம் 20 தேதி வரையில் நடைபெற இருக்கும்சர்வதேசவிழாவில்(International Fair) கலந்து கொள்ள இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. ஆண்டுதோறும், ஆயிரக் கணக்காக உலகெங்குமுள்ள மக்களை இஸ்மீருக்கு ஆகர்ஷிக்கும் விழா இது. இவ்விழாவில் அமெரிக்கா, பிரிட்டன், இதாலி, பிரான்ஸ் போன்ற பல முக்கிய நாடுகளும் பங்கெடுத்துக்கொள்ளும். மத்திய கிழக்கு நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியாவின் வியாபாரத்தை விஸ்தரிப்பது என்ற நோக்கத்தோடு பார்த்தால் இந்த விழா மிகுந்த முக்கியமானது. கலந்துகொள்வோரின் உற்பத்திப் பொருள்களைப் பற்றி வெளிநாட்டார் நன்கறிந்துகொள்ள வாய்ப்பளிக்கும் விளம்பர சாதனமாக விழா பயன்படும்.

விழா கண் காட்சியில் கலந்துகொள்ள விரும்பும் சென்னை மாகாண கைத்தறி ஜவுளி வியாபாரிகள், சங்க அங்கத்தினர்கள் மத்திய சங்கத்துடன் தொடர்பு கொண்டு முழு விபரமும் அறியலாம்.

வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி!

கூட்டுயர்வே நாட்டுயர்வு! கூட்டுறவு கைத்தொழிலை ஆதரியுங்கள்!

Q. 268, ஆண்டாள் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், ஸ்ரீவில்லிபுத்தூர் P. O.

எங்களிடம் 20s x 26s நூலில் தயாரித்த 30" x 16 கெஜம், 50" x 12 கெஜம் காடாபீஸ்களும் 36s x 40s நூலில் தயாரித்த 2 x 8 வேஷ்டி ஜோடிகளும் 50" x12கெஜம் காடா பீஸ்களும் தயாராகின்றன. விலை சகாயமாகவும், கெட்டியான சரக்காகவும் கிடைக்கும்.

தற்சமயம் விலைகள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன.

தேவைக்கு எழுதுங்கள்! முன் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்.

S. ராமசாமி, தலைவர்.

“ அன்றும் - இன்றும் ”

சங்ககால இலக்கியங்களைச் சான்றுக்கழைத்து—அதனில் நெய் தொழிலைப்பற்றிக் கூறியுள்ள சீரும் சிறைப்பையும் எடுத்துக் காட்டி—இன்றைய யதார்த்த கால சீரழிவைக் கண் முன் நிறுத்துகிறார் இக்கட்டுரையாளர்; கல்லூரி மாணவர்

க. கருப்பஞானி, வ. புதுப்பட்டி.

அன்று, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்—எங்கள் வள்ளுவர் காலத்தில், “நெய்யுந் தொழிலினுக்கு நிகரில்லை” என்ற சங்கொலி, முரசொலி, பாரதத்தில், தமிழகத்தில் ஒலிக்கப் பெற்றது,

நம் நாட்டு மக்கள், குறிப்பாகத் தமிழர்கள் நெசவுத் தொழிலை ஓம்பி வளர்த்தனர்; நல்ல நல்ல ஆடைகளை நெய்து தந்தனர், நன்மக்களுக்கு, நாட்டுக்கு, நல்லுலகிற்கு. நெசவுத்-தொழிலின் தரம் உயர்ந்தது. உலகில் நெசவாளர்கள் மானம் காக்க வந்த மகான்கள் என நினைக்கப்பட்டனர். நம் நாட்டிலும் நெசவுத் தொழிலின் தரம் வளர்ந்தது. நெசவாளர்கள் மிகுந்தனர். நல்லாடைகள் குவிந்தன. இதைப் பாரதியாரே இயம்புகின்றார் தமது இணையற்ற சுதந்திரக்கவியில் “பட்டிலாடையும் பஞ்சிலாடையும் பண்ணி மலைகளெனக் குவிப்போம்” என்று அவர் காலத்தில்.

எங்கள் வள்ளுவர் ஒருவர்தான் நெசவுத் தொழிலின் நன்னிலைக்கு ஆதாரம் என்றோ, நம் சுதந்திரக்கவி சுப்பிரமணிய பாரதி ஒருவர்தான் நம் பண்டைப் பெருமையை எடுத்தோம்புகின்றார் என்றோ எண்ணிடல் வேண்டாம்.

சற்று திருப்புங்கள் சரித்திரத்தை; நன்கு ஆராயுங்கள்; நீங்கள் அறிய வருவீர்கள் நெசவாளர்களின் நன்னிலையை; நெசவாளர்களை வாட்டி வதைத்து அவர்களின் நெஞ்சு எலும்பை உத்திரமாகவும், முதுகெலும்பைத் தாங்கு தூணாகவும், விலாவெலும்புக் கூட்டை ஜன்னலாகவும், மண்டை ஓட்டை மணிக்கூஜாவாகவும், சதைத் துண்டை செங்கல் கட்டியாகவும், குருதியை ஊண் சாந்து குழைக்கும் நீராகவும், நரம்பினை நன்னாராகவும் கொண்டு இன்ப மாளிகை அமைக்க விரும்பும், அமைக்கின்ற நமது அரசாங்கமும் அறியும்.

கப்பல் கட்டினான்—கடல் கடந்தான்—கடாரமும் வென்றான். கடாரத்தில் நாட்டினான் வெற்றிக் கொடி, கிழக்கத்திய நாடுகளில் நாட்டினான் வியாபாரக் கொடி தன் மானம் இழந்த இன்றைய தமிழனல்ல. ‘உயிரின் மானம்பேல்’ என வாழ்ந்த வள்ளுவர் காலத் தமிழன்; பாபிலோனிலே, எகிப்திலே, ரோமிலே, கிரீசிலே, சிரியாவிலே பறந்தது நம்மவர் வியாபாரக்கொடி அன்னாரால், இன முழக்கம் செய்த இளங்கோ காலத் தமிழன், பர்மாவிலே, மலேயத்திலே, சாவகத்திலே, சுமத்திராவிலே, சீயத்திலே தன் வியாபாரத்தைப் பரப்பினான்.

இந்நாட்டவரோடு நம்மவர் செய்த வியாபாரப் பொருள்களின் பட்டியலைச் சற்று பாருங்கள். அங்கே முதலில் விளங்கும் நம் தமிழ் நாட்டு ஆடை, நாகரீக ஆடை, நல்லாடை, மெல்லிய ஆடையென்பது.

“தமிழ் நாட்டு மக்கள் நெய்யும் பொழுது ஆடைகளிற் சித்திரங்கள் அமைத்து வந்தார்கள். ஆடைகளிற் சித்திரங்களை எழுதும் வழக்கம் தமிழ் நாட்டில் பழமையானது. படம் என்று உடைக்குப் பெயர் வந்தது இக்காரணமேயாம்”. இது நான் கூறும் கூற்றல்ல சரித்திரக் குறிப்பு ஒன்று செப்புகிறது இவ்விதம்.

இது மாட்டுமோ, “பட்டினும் மயிரினும், பருத்தி நூலினும், கட்டு நுண்வினை” கண்டவர்கள் நந் தமிழ் மக்கள், ‘பாலாவியன்ன’ மிகமேலாடை செய்தவர்கள் நம் தமிழ்மக்கள்; இவைகளெல்லாம் என் சரக்கல்ல—உழைத்து உழைத்து உருகி ஓடாகியிருக்கும் ஓர் நெசவாளியின் உள்ளக்குமுறலுமல்ல என்பதை அன்பர்களுக்கு—ஆட்சியாளருக்கு அறிவிக்கிறேன்.

காட்டியுள்ளது கொஞ்சமென அஞ்சிடாதீர், மிஞ்சியுள்ளதைப் பஞ்செனப் பகர்கின்றேன் ஏட்டில் உள்ளபடி. பருத்தியினால் அழகான படம் (உடை), எலிமயிரினால் மெல்லியஉடை, ஆட்டு மயிரினால் அழகான ஆடை அமைத்தார்களேயன்றி நீல நிற பிற கச்சுக்களும் நெய்தார்கள் நம் தமிழ் மக்கள். பூத்தொழில் அமைந்த கலிங்கங்களும், முடிச்சுக்களையும், மணிகளையும் விளிம்பிலே யுடைய பட்டுடைகளும் மிகப்பாங்காய் அமைத்தார்கள்.

திகைக்காதீர்கள் நம்மவர் நெய்த திறமையைக் கண்டு, வாருங்கள் என்னைப் பின்பற்றி. புலவர்கள் உவமை மாலையிட்டு வரவேற்கின்றார்கள் உங்களை— நெசவாளிகளே; உவமை அம்பு கொண்டு வாட்டுகின்றார்கள் இன்றைய ஆட்சியாளரை. "பாம்புச்சட்டையாம் பல ஆடை பாலாவியாம், புகையாம் பிற்பல, மூங்கிலின் உரித்த தோலாம்மிக்க ஆடை" இத்தன்மய ஆடை செய்தவர்கள் நம் தமிழர்கள்— நம் முன்னோர்கள்-வேற்றாரல்ல

வாருங்கள் பின் தொடர்ந்து, வரவேற்புக்கண்டு நின்றுவிடாதீர்கள் கரடுமுரடான பாதை, காலைச் சற்று ஊன்றி வாருங்கள். அதன்பின்தான் இன்ப மாளிகை உள்ளது. நாம் செல்ல வேண்டிய பாதையோ வெகு தூரம். ஆதலின் நாம் சுருக்க வழியில் செல்ல வேண்டியிருக்கிறது. அதாவது தொட்டும் விட்டும் செல்ல வேண்டியிருக்கிறது ஒவ்வோரிடத்திலும்.

இதோ நான் முதலில் உங்களை அழைத்துச் செல்வது 'இறையனார் அகப்பொருளுரை'க்கு. நெஞ்சுரத்துடன் நோக்குங்கள் இவ்விடத்தினை. 'நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளாற் கை வன் மகடு உத்தனது கைமாண்பினால் ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூல் நூற்றலென்பது". கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிரும் பிறரும் பஞ்சினை நூற்று வந்தனர் என்று மகளிர் நூற்று வந்த வழக்கத்தை இது விளக்கா நிற்கின்றது.

இதோ "மலைபடு கடாமி"ல் காலெடுத்து வையுங்கள் சிறிது நேரம். "இழை மருங்கறியா நுழை நூற்கலிங்கம்" என்று பண்டைத் தமிழாடைகளின் குன்றின்மேல் விளக்காகக்காட்டுகிறது பாருங்கள் இந்த அடி.

இதோ ஒரு நொடி, மறத் தமிழனின் வீர நூல் "புறநானூறு" "இழையணி வாரா வொண் பூங்கலிங்கம்" இதுவும் நம் முன்னோர் நெய்த ஆடையின் நுண்மையைத்தான் எடுத்துக் காட்டா நிற்கிறது. இதோ கடந்து விட்டோம் புறநானூற்றை.

அதோ ஒரு அடி, ஐம்பெருங் காப்பியங்களுள் உயர் நூலெனும் "சீவகசிந்தாமணி". "பொருந்து பூம்பொய்கைப்போர் வையைப் போர்த்து". பொய்கை வடிவு எழுதிய படம் (ஆடை) ஒன்று பொலிவுறுகிறதல்லவா! இவ்விடத்தில்.

நாம் வந்த நடையிற் சிறிது கடினம் கண்டிருப்பீர்கள். இழைப்பாருங்கள் இவ்விடத்தில் இதோ இறுதியை எட்டிப் பிடித்துவிட்டோம். இனியும் உங்களை என்னோடு அழைத்துச் சென்று உங்கள் பொருமையைச் சோதிக்க யான் விரும்பவில்லை. களைப்புக் கடலில் மூழ்கியுள்ளீர்கள் நீங்கள். இப்போது நமது பிரயாணத்தை இத்துடன் முடித்துக்கொள்வோம்.

நெசவாளர்களே! இறுமாம்பு அடைந்துவிடாதீர்கள் உங்கள் தொழிலின் மேன்மையைக் கண்டு! உங்கள் ஆடையின் அழகினைக்கண்டு! உங்களவர் திறமையைக்கேட்டு!

ஏனைய தொழிற் தோழர்களே! நெய்யுந் தொழிலைக்கண்டு நெஞ்சுருகி விடாதீர்கள்! ஆடையின் அழகினைக்கண்டு மயங்கிவிடாதீர்கள்! தமிழ் நாட்டின் நிலையைக் கண்டு உளக் களிப்புக் கொள்ளாதீர்கள்! இது இக்காலத்திலல்ல! அந்தக்காலம் — தெய்வப்புலவர் திருவள்ளுவர்காலம், அறிவுநிறை ஔவை காலம்—இளங்கோகாலம்.

அக்காலத்தினை மட்டும் சொல்லிவிட்டு இக்காலத்தின் நெசவாளரின் நிலையைக் கூறாது விடுத்தேன் எனக் கோபித்துக் கொள்ளாதீர்கள். இதோ உங்களை உம்மை எங்கள் நெசவுத் தொழிலாளியினிடம் அழைத்துச்செல்லுகிறேன் வாருங்கள். நீங்கள் நெஞ்சுரம் கொண்டவராயின் என்னைப் பின் தொடருங்கள்.

ஏனெனில்; அங்கு பாழடைந்த தெருக்கள்தான் உங்களை ஏந்தி நிற்கும், அடைத்த ஓட்டு, கூரை வீடுகள்தான் உங்களை வரவேற்கும், இடுகாட்டு எலும்புகள் ஆனால் வாழ்வனதான் உங்க

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

S. No. 523.

(சங்ககிரி R S.) **திருச்செங்கோடு** (சேலம் ஜில்லா.)

எங்களிடம் 2000 தறிகளிலிருந்து நவீன டிசைன்களில் தயாராகும் அடியிற்கண்ட ரகங்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும்.

கோட்டிங், ஷர்ட்டிங் பீசுகள், சலவை, காடா பீசுகள், பெட்ஷீட், சால்வைகள் துண்டு, வேஷ்டித்தான்கள், வெள்ளை, கலர் சேலைகள்.

தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.

K. A. காசிவிஸ்வநாத முதலியார், தலைவர்.

ளுக்கு வரம்வறபுரை வழங்கும் கண்ணீர் துளிகள்தான் உங்களை அர்ச்சிக்கும், அழுகைக் குரல்தான் உங்களை வாழ்த்தும், தரித்திர தேவதைதான் உங்களை ஆலிங்கனம்செய்வாள். ஆதலின் நீங்கள் கல் நெஞ்சம் படைத்தவராக இருப்பின் நல்லது அல்லாவிடில், நீங்கள் நெஞ்சுருக மனமிடிய, உளம் வாட, கண்ணீர் உருக்க, ஏன் மயக்கம் கொளவே வேண்டி வரினும் வரும்.

இதோ, நண்பர் ஒருவர்தான் என்னைப் பின் தொடருகிறார். நண்பரே! நாம், இதோ புகுவது நெசவாளர், ஆம். பார்த்தஉடன் உமக்கு விளங்கவில்லையா! நீண்ட நல் தெருக்கள், வரிசை வரிசையாய் வீடுகள், கூரை வீடுகளும் இவ்வரிசைகளில் தெரிகிறதல்லவா! ஓட்டு வீடுகளும் அதோ தெரிகிறது பார்! காரை வீடு, மாடி வீடுகளும் இங்கு ஒன்று அங்கு ஒன்றுகாண்கிறாய்!

நண்பரே! வாரும் தெருவை ஓர் சுற்று சுற்றி வருவோம். காலை நேரந்தான்! ஏன் இப்படி மருளுகிறீர்! அதி காலையிலே, அகன்ற தெருவெல்லாம், ஓடை ஓடைபோன்று பாவுகள் விரிக்கப்பெற்று, ஊர்மக்கள் எல்லாம் தெருவில் வந்து பாவாற்றிப் பரவசப்படுவதற்குப் பதில், தெரு பாலைவனம்போல், ஆட்களே தெருவில் காண்பது அரிதாய் இருப்பது பற்றியா? கலங்கிவிடாதீர்நண்பரே! தெருமுகப்பிலேயே தேம்ப ஆரம்பித்து விடுவீர் போலும்; உள்பக்கம் நிறைய இருக்கிறது தேற்றிக்கொள்ளும் மனதை.

ஏஜனடுகள் தேவை

நண்பா! தலைவாசல்களெல்லாம் அநேகமாகத் தெருப் பக்கமாகத்தானிருக்கிறது. நீர் கூரை வீடுகளுள் எத்தனை வீடுகள் மூடப்பட்டிருக்கின்றன என எண்ணி வாரும்! நான் ஓட்டு வீடுகளைப் பார்த்து வருகிறேன். எல்லாக் கூரை வீடுகளும் அடைக்கப்பட்டுத்தா னிருக்கிறதா! நீர் எண்ணிக்கொண்டு வாரும் கொஞ்சம் பொறுமையுடன்.

அன்பரே! ஏன் இந்த இடத்தில் நின்று விட்டீர்! கண் வேறு கலங்கியிருக்கிறது. அதிசயமாகத்திறந்துள்ள இக் கூரை வீட்டினைப் பார்த்து விட்டீரையா! உள்ளுக்குள்ளும் கூர்ந்து கவனிக்கிறீரா! நண்பா! சந்தேகமேன்! அவ்வீட்டிற்குள்ளிருப்பது நீர் கூறியபடி இடுகாட்டு எலும்புக் கூடல்ல; உயிர் உண்டு, அது நடைப் பிணம்; நெசவாளி மகன்; ஆம் அதோ ஒரு மூலையில் குந்திக் கொண்டிருப்பதுதான் அப்பிள்ளையின் தாயார். என் ஊர் இது. ஆகலால் இவ்வீட்டினைப் பற்றி எனக்குநன்றாகத் தெரியும்.

இதோ, தெரிகின்றதே அவ்வெலும்புக்கூட்டின் தகப்பனார் இவ்வூரிலுள்ள ஓர் கூலி நெசவாளி. அவனுக்குப்பிள்ளைகள்ஐவர் பஞ்சபாண்டவர்கள் மாதிரி. அவர் 1945-வது ஆண்டில் மனிசனுக ஓர் கூலியாகஇருந்தார் 1948ல் வரியன் ஆனார். 1950ல் தரித்திரத்தின் தத்துப் பிள்ளையானார். 1951ல் திருடனைப் பின் பற்றினார். 1952ல் ஊரை விட்டே ஓடிவிட்டார் — அல்ல — ஓட்டப்பட்டார்.

இப்போது இக் குடும்பத்தினை ஏழ்மைக் கழுகு பிய்த்துத் தின்னுகிறது. அது கொத்தித் தின்ற மீதிதான் இவ்வெலும்புக் கூடுகள். இன்னும்கொஞ்சநாள் பின், ஒருவர் பின் ஒருவராக சுடுகாட்டில் சவக் குழியில் இன்பப் பொழுது போக்கப் போகின்றார்கள். சவக்குழி இப்போதே அவர்களை அழைத்துக்கொண்டேயிருக்கிறது. நண்பா! இவ்வீட்டிலேயே இவ்வளவு நேரம் செலவழித்தால் இன்று இத்தெருக்களைச் சுற்றி முடியாது.

இங்கே கொஞ்சம் திரும்பு நண்பா! இந்த ஓட்டு வீட்டினுள் கூர்ந்து கவனி. அதோ ஓர் கிழிந்த பாய் வீட்டை அலங்கரிக்கிறதல்லவா! அதன்மேல் ஓர் வயதான மங்கை, ஆம் நெசவாளிதான். உடையில் ஆங்கில மாதரைப் பின்பற்றியவள்போல் படுத்திருக்கிறாள் பார். அவளைச் சுற்றி ஒப்பாரி வைத்துக்கொண்டிருப்பது அவளது பிள்ளைகள்தான். பிள்ளைகளை எண்ணிவிடாதே; நெசவாளியல்லவா! கடவுள் அதிலாவது நெசவாளிகளுக்குக் குறைச்சல் வைக்கவில்லை. கதையைக் கேள்!

அந்த வயது மங்கையின் கணவன் 1945ல் தன்மானம்காக்கும் தறி 3 கொண்டவன். 1947ல் ஒரு தறியினைத் தியாகம் செய்துவிட்டான் தரித்திரத்துக்கு. ஒரு தறி தன் மூத்த மகளின் முகூர்த்தத்தைப் பின்பற்றி அவளுடன் வெளியில் சென்று விட்டது. 1948ல் ஓர் முதலாளியின் கீழ் ஆடும் ஓர் கூலியாள். 1950ல் தரித்திரத்தின் வாயில் அகப்பட்டு, பருந்து வாய் கோழிக் குஞ்சானான். 1951ல் அருப்பக் கோட்டையின் காலடியில் வீழ்ந்தான். தன்னை ஏற்றுக்கொள்ளும்படி கெஞ்சினான். போன புதிதில் ஏதோ வீட்டிற்கு கொஞ்சம் பணம் — அல்ல — துட்டு அனுப்பினான். இப்போது அந்த நெசவாளியின் மனைவி எமனின் அரவணைப்பில் போராடுகிறாள், மேலும் பருமகன்வேறு எமனின் விருந்தாளியாகப் போய்விட்டான். அந்த நோயாளியின் மருந்து எது தெரியுமா' பழங் கஞ்சிதான்! கண்ணீரைத் துடைத்துக்கொள் நண்பா! கலங்கிவிடாதே! விரைவில் என்னைப் பின் தொடர் அன்பா!

தோழனே! அதோ பார் அவ் வேப்பமர நிழலில். ஆம் அது அவர்கள் இருப்பிடம்தான். நெசவாளர்களுக்குதான். அதோ அப்பக்கம் இருப்பதுதான் பிள்ளைகளின் தாய், ஆம்—அவள் விதவை போலும் — வெள்ளாடை அல்ல அழுக்காடைதான் அவளை ஒண்டிக்கொஞ்சுகிறது பார்! அன்பாய், அறவணைப்பில் வளர்த்த மகனுக்கு ஏதோ பிட்டுத் தருகிறாள் பார்! என்ன தெரியுமா? லட்டா! லட்டு அல்ல! பிண்ணாக்கு! எள்ளுப் பிண்ணாக்கல்ல! கடலைப் பிண்ணாக்கு!

நண்பா! ஐயோ! தண்ணீர்! தண்ணீர்! மயங்கி வீழ்ந்து விட்டனையே நண்பா! ஊர் அல்லவா உன்னைச் சுற்றிக் கூடி விட்டது என்ன! ஊருக்கா! டாக்டரிடம் காட்டுவோம் நண்பா! சரி ஊருக்குப்புறப்படு. பின் நான் கடிதம் எழுதுகிறேன் விபரமாக!

வ. புதுப்பட்டி, 15–5–52.

ஆருயிர் நண்பா!

நலம் என்று நான் எப்படி எழுத! எனினும் உன் நலம் கேட்க விரும்புகிறேன்! உற்றார் உறவினர் சுகம் பற்றிச் சொல்ல மிகவும் வெட்கப்படுகிறேன்-வேதனைப் படுகிறேன்! ஏனெனில் அவர்களும் நெசவாளர்கள் தானே! நெசவாளர்களின் துயரம் கண்டு தேம்பினாய், மயங்கினாய் கலங்கினாய்; நான் மட்டும் ஏன் இவ்வாறு கறைந்துருகாது, கண்ணீர் விடாது உள்ளேன் என நீ அன்றே என்னைக் கேட்டாய். நைந்துருகும் நெசவாளிகளின் நடுவில் வசிப்பவனாகிய நான் அவர்களின் இன்னல் நினைந்து—கேட்டு—கண்டு அலுத்துச் சலித்துவிட்டேன். வெயிலிலே சதா நடப்பவர்களுக்கு வெயிலின் கொடுமை தெரியாது. உலைக்கூடத்திலேயே உழைத்து உருகும் கொல்லனுக்குத் தீயின் வெம்மை தெரியாது; அதுபோல் யானும் துன்பம் நிறைந்த என் நெசவாள மக்களின் மத்தியில் வசிப்பதனால் அவர்களின் துயரம் எனக்கு வழக்கமாக சாப்பிடும் சாப்பாடுபோல்; விடிந்தெழும் போதே வெளியில் தலை நீட்டினால் வேதனைக் குரல்; காலை உணவிற்குப் பிச்சையெடுக்கும் குழந்தைகள் என்ன செய்ய இயலும் என்னால்!

எங்கள் ஊரிலிருந்து இது அளவும் அயலூர் சென்ற நெசவாளர் குடும்பங்கள் எண்ணில. அவர்களின் சோகக் கதையை; பிச்சை யெடுத்தான் பாலனென்ற நெசவாளி; பிண்ணாக்குத் தின்றான் பாலையா வென்ற நெசவாளி; புளியங்கொட்டைதான் அவனது உணவு; பிண்ணாக்கைப் பிரியமாக உண்டான்; பெற்ற பிள்ளைகளின் நிலை கண்டு அழுதான் பெற்ற பிதா; தரித்திரத்தால் துரத்தப்பெற்றான் தரிகாரன் ஒருவன்; ஊர் விட்டு ஓடினான் ஒரு நெசவாளி ஏழ்மையைக் கண்டு; அருப்புக்கோட்டை சென்றான் அண்மையில் ஓர் நெசவாளி; அயலூர் வாசியானான் ஓர் தறிகாரன்; அகதிகளாக மாறினார்கள் அநேக குடும்பங்கள்; பிள்ளை விற்றாள் பெற்ற தாய் ஒருத்தி பஞ்சத்தால்; நிலையற்றுத் தற்கொலை செய்துகொண்டான் நிலைகாணா ஒரு நெசவாளி; என்று எழுதி விட்டால் தீர்ந்து விடாது.

நண்பனே நூல் பேல்கள் எங்கள் ஊரை மறந்து விட்டன; பிள்ளைகளை இழந்த தாய் தான் பாவுக்களை இழந்த தெருக்கள்; இப்போது ஏதோ நிலமுள்ள ஓரிரு நெசவாளிகள் என்ற சமூகத்தில் பிறந்த ஓரிரு குடும்பங்களே எங்களூரில் தங்கியிருக்கின்றன. இப்போது எங்கள் தெருக்களை, பகலில் 'நாய்களின் போர்க்களமாக' விட்டிருக்கிறோம் இரவிலோ, நரிகள் ஊளையிட்டு இன்னிசைச் சங்கீத மிசைக்கின்றன; இதற்கு தப்பட்டம் அடிக்கும் சிலவித சத்தமிட்டு சில நரி நண்பர்கள்; சிலவைகள் ஒத்தூதும்; அச்சங்கீதத்திற்கு ஏற்ப இன்னும் சில சிங்கி தட்டும்; இன்னும் சில சாம்பிராணிப் புகை சாமிகளுக்குக் காட்டுவது போல மண்ணை வாரி இறைத்து எங்கள் தெருவைஆசீர்வதிக்கும்.

நண்பா! கலங்கி விடாதே கடிதத்தினைக் கண்டு. தரித்திரதேவதையின் துணைவர்கள் ஆகிவிட்டோம் நாங்கள், நெசவாளிகள். அவள் சிலரைத் தன் தோற்றத்திலே அடிமையாக்கிக்கொள்ளுகிறாள், சிலரைத் தன் கண்வீச்சில் வீழ்த்துகிறாள், இன்னும் சிலர் அவளது அரவணைப்பிலிருந்து தப்பமுடியாது தவிக்கின்றனர், இன்னும் சிலரோ அவளது பஞ்சணை மெத்தையில் இருந்து இன்பம் துய்த்து மயங்கிக்கிடக்கின்றனர்.

நண்பரே! இத்தரித்திர தேவதையை விரட்ட எங்களால் இயலவில்லை. அதனை விரட்ட நெசவாளர்கள் மறியல் செய்தனர். சேலத்திலே மறியல் முரசு கொட்டப்பெற்றது. அருப்புக் கோட்டையிலே, ஸ்ரீ வில்லிபுத்தூரிலே அது எதிரொலித்தது, இத்தரித்திர தேவதையை விரட்ட ஓர் சித்தையன், ஓர் எம். எஸ். ராமசாமி, ஓர் இராமலிங்கம் போதுமா! வறுமையில் நெசவாளர்களுடன் சோர்ந்து வாடும் ஓர் "கைத்தறி" போதுமா?! நண்பா! எங்கள் இன்னல், தமிழ் நாட்டு நெசவாளிகளின் இன்னல் என்றும் கடலின் அலைபோல் ஓயாது என்றும் தெரிகின்றது.

[3-ம் பக்கம் பார்க்க]

கைத்தறி

MADRAS

வேட்டி புடவைகள் நெய்திடுவான் — அவன்
வீட்டினில் போய்ப் பார்த்தால் துணிப்பஞ்சம்

— திருமூர்த்தி.

● **கோவை** 15—6—52 ●

வெளி நாடு செல்லும் தூது கோஷ்டி!

"கைத்தறி ஜவுளி ரகங்களுக்கு வெளி நாடுகளில் மார்க்கெட் கண்டுபிடிக்க ஒரு பெரிய அதிகாரியோ, அல்லது இவ்வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பிரபல வர்த்தகர் ஒருவரையோ சென்னை சர்க்கார் கூடிய சீக்கிரம் வெளி நாடுகளுக்கு அனுப்பும்" என்று ராஜ்ய உணவு, நிதி இலாக்காக்களின் அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்துள்ள பேட்டி யொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பு கைத்தறி ஜவுளியின் தேக்கத்தினுல் பாதிக்கப் பட்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான வர்த்தகர்களுக்கும், மற்றும் நெசவாளர் கூட்டுறவு இயக்கத்தினருக்கும் ஆறுதலளிக்கும் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையில் சர்க்கார் இறங்க முன் வந்திருப்பது கேட்க உண்மையிலேயே யாரும் சந்தோஷப்படுவர்; வரவேற்பர்.

ஏனெனில்; பல ஆண்டுகளாகவே இந்த ராஜ்ய கைத்தறி நெசவாளர்கள், வர்த்தகர்கள் ஆகியோரின் ஸ்தாபனங்கள் மேற் கண்ட முறையில் சர்க்கார் நடவடிக்கை யெடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோரி வந்த போதெல்லாம் சர்க்கார் இடித்து வைத்த பிள்ளையார் போல் இருந்து வந்திருக்கிறது. அதே காலத்தில் திரு. குமாரசாமி ராஜா போன்றவர்கள், வெளி நாட்டு மார்க்கெட்டை கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் எதிர்பார்ப்பது அழகல்ல என்றும் இதோபதேசமும் செய்தார்கள். இந்த வெளி நாட்டு மார்க்கெட் தேடும் பிரச்னையில் சென்னை மாகாண கைத்தறி ஜவுளி வர்த்தகர்கள் சங்கத்திற்கும், மாஜி பிரதமர் குமாரசாமி ராஜாவுக்கும் ஒரு தடவை பொது மேடையிலேயே தர்க்கம்கூட நடைபெற்று இருக்கிறது.

தவிர, ராஜ்ய கைத்தறி கமிட்டியினர்கூட தங்களின் கூட்டத்தில் கைத்தறி ஜவுளிக்கு வெளி நாடுகளில் மார்க்கெட் தேடவும், அங்கு என்னென்ன ரகங்கள் தேவையோ அதை அறிந்து வந்து அதற்கேற்ப இங்கு ரகங்கள் தயார் செய்யவும் ஒரு தூது கோஷ்டியை அனுப்பி வைக்க வேண்டுமென்று ராஜ்ய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

இந்தக் கோரிக்கையை அன்று இருந்த குமாரசாமி ராஜா சர்க்கார் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டனரே தவிர, நடை முறையில் அதை நிறைவேற்றி வைக்க ஊக்கம் காட்டவில்லை. எத்தனையோ உபயோகமற்ற–ஆடம்பர செலவுகள் நடத்திய அன்றைய சர்க்கார், தூது கோஷ்டியில் செல்பவர்கள் அவரவர்களின் சொந்தப்பொறுப்பிலே செலவுகளை ஏற்றுக் கொள்வதானுல் போகலாம் என்று கூறி அம்முயற்சிக்கு ஆப்பு அறைந்து விட்டனர். அதே காலத்தில் கைத்தறியாளருக்கு அதைச் செய்யப்போகிறோம் இதைச் செய்யப்போகிறோம் என்று மட்டும் கதையளக்கத் தவறவில்லை.

அப்படிப்பட்ட குருட்டுத்தனமான ஒரு பாதையை ராஜ்ய சர்க்கார் அன்று மேற்கொண்டதன் பலன்தான் இன்றைய கைத்தறி ஜவுளித் தேக்கம் என்று கூறினுல் அது தவருக இருக்காது இன்று யதார்த்த நிலைமைகளை நன்கு புரிந்து கொண்டுள்ள ராஜாஜி மந்திரி சபை, நிச்சயமான ஓர் நல்வழி கைத்தறித் தொழிலுக்கும், வர்த்தகத்திற்கும் காண முன் வந்திருப்பது குறித்து வரவேற்கவே செய்கிறோம். அவ்வகையில் கட்சி, அரசியல் வேற்றுமை காட்டாது, சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் காங்கிரசையும், தமிழ் நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் பெடரேஷனையும் கூட்டிவைத்து அவர்களின் அபிப்பிராயத்தையும் கேட்டு, அவர்களது ஆலோசனைகளில் பலவற்றை ஏற்றுக்கொண்டு மிருப்பது கேட்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதே காலத்தில், வெளி நாடுகளின் கைத்தறி ஜவுளிக்கு மார்க்கெட் தேட ஒரு உயர்தர அதிகாரியையே, அல்லது ஒரு பிரபல வியாபாரியையோ மட்டும் அனுப்பினுல் போதாது என்று நாம் ராஜ்ய சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். பஞ்சு ஏலத்திற்கு உகாண்டாவுக்கு மத்திய சர்க்கார் அனுப்பிவைத்த ஒரு உயர்தர அதிகாரியின் கதையாக இதுவும் ஆகிவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தினுலேயே இதைக் கூறுகிறோம். தவிர இன்றுள்ள எந்த அதிகாரிக்கும் கைத்தறி ஜவுளி பற்றி நிச்சயம் ஒன்றும் தெரியாது என நம்மால் கூறமுடியும். இதைச்சொல்வதன் மூலம் நாம் ஏதோ சர்க்கார் அதிகாரிகளைக் குறைத்துச் சொல்லுவதாக யாரும் அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது. தவிரவும், ஒரு மார்க்கெட்டிற்குத்தேவையான ரகம் என்ன என்று வேண்டு

மானால் அனுப்பும் அதிகாரியால் தெரிந்து கொள்ள முடியுமே தவிர அந்த ரகத்தை நம் ராஜ்யத்தில் உற்பத்தி செய்ய அடக்க விலையென்ன ஆகிறது. இங்கு (வெளி நாடுகளில்) கொண்டு வந்து விற்க மார்க்கெட் நிலவரம் இடம் தருகிறதா; அந்த ரகத்திற்கு (குறிப்பிட்ட கெஜத்திற்கு) எவ்வளவு நூல் பிடிக்கும் என்பது போன்ற தொழில் நுட்பங்களெல்லாம் அவருக்குத் தெரிந்துகொள்ள முடியாது.

அதே போல், ஒரு அதிகாரியைத் தனியாக அனுப்புவதில் உள்ள அபாயம், தனியாகப் பிரபல வியாபாரி ஒருவரை அனுப்புவதிலும் இருக்கிறது. எந்தத் தனிப்பட்ட வியாபாரியும் ராஜ்ய நலன் கருதி கைத்தறி ஜவுளி வர்த்தகத்தின் தொழில் ஸ்திரத்தன்மையை மனதில் கொண்டு உருப்படியாக நல்லது செய்துவிடுவார் என்று சொல்ல நம்மால் முடியாது. எனவே, தூது செல்லக் கூடியவர்கள், சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களின் பிரதி நிதிகளாகவும், செல்லும் விஷயத்தில் சிறிது தெளிவுள்ளவர்களாகவும் இருக்கவேண்டுமென்றும் அவ்வகையில் ராஜ்ய கைத்தறி ஜவுளிவியாபாரிகள் சங்கம் ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகியஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், சர்க்கார் அதிகாரி ஒருவர் ஆக மூவரைக் கொண்ட தூதகோஷ்டியாகவாவது வெளி நாடுகளுக்கு அனுப்பவேண்டுமென சர்க்காரின் கவனத்திற்கு நாம் கொண்டுவருகிறோம். ●

[9-ம் பக்கத்தொடர்ச்சி]

இதன்மீது, அச்சுத் தொழிற்சாலையாளர் கூறுவது உண்மையிலேயே சரிதானா என்பதை சர்க்காரின் தொழில் இலாகா அதிகாரி ஒருவரே திருப்பூர், ஈரோடு போன்ற அச்சுப்பட்டறைகள் பெருவாரியாக இருக்கும் இடங்களுக்கு வந்து நிலைமையை ஆராய்ந்தும் சென்றிருக்கிறார். இந்த விசாரணையின் பயனாகத் தங்கள் தொழிலுக்கு நல்லதொரு விடிவு காலம் பிறக்குமெனவும் நம்பிக்யிருந்தனர்.

ஆனால், இந்திய சர்க்காரின் மேற்கண்ட முடிவு நேர் விரோதமான பலனையே இந்த ராஜ்ய டெக்ஸ்டைல் அச்சுத் தொழிற்சாலையாளருக்கும், தொழிலாளர்களுக்கும் அளித்துள்ளது.

தவிர, இந்த ராஜ்யத்தில் கைத்தறிநெசவுதொழிலில் உற்பத்தியாகும் சேலை ரகங்களுக்கு அனேகமாக இந்த வியாபார மந்த காலத்திலும் ஓரளவு கிராக்கியிருந்துவருகிறது. மில் சேலைகள் ஓரளவு கைத்தறி சேலைகளுக்குப் போட்டியாக இருந்தாலும் அதையும் சமாளித்தே இன்று கைத்தறி சேலை ரகங்கள் மார்க்கெட்டில் விற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும் இன்றுவரை இருந்து வரும் இந்த மில் சேலைப் போட்டியையே தவிர்க்கவேண்டுமென்றும், அதற்கான ரகப் பிரிவினைகள் செய்து தரவேண்டுமென்றும் இந்த ராஜ்ய கைத்தறியாளர் ஸ்தாபனங்கள் அனைத்தும் ஏகோபித்து சர்க்காரை வற்புறுத்திக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலேயே "மில்கள் சேலைகளுக்குச் சாயம் போடுவது அனுமதிக்கப்படுகிறது" என்றால் யதார்த்தத்தில் மேற்கண்ட முடிவு இந்த ராஜ்யகைத்தறி நெசவாளியையும், வர்த்தகத்தையும் நிச்சயம் பாதிக்கும் என்பதை நாம் எடுத்துக் காட்டியாக வேண்டியிருக்கிறது.

எனவே, உத்திரவின் விளைவை முன்பின் யோசியாது — அத்தொழில் சம்பந்தப்பட்ட சகலரின் அபிப்பிராயமும் இந்தத்திட்டம் சம்பந்தமாக எவ்வாறு இருக்கிறது என்பதைக் கலந்து பார்க்காது செய்துள்ள இம் முடிவை நாம் ராஜ்ய நெசவாளர்கள், டெக்ஸ்டைல் அச்சுத்தொழிற்சாலையார், தொழிலாளர், வர்த்தகர்கள், மாஸ்டர் வீவர்கள் ஆகிய அனைவரின் தொழில் நலனையொட்டி வன்மையாக ஆட்சேபிக்கிறோம்; திருத்திக்கொள்ளுமாறு மத்திய சர்க்காரை வேண்டுகிறோம்.

— மா. கி. சா.

அச்சகத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறினால் "கைத்தறி" யின் இந்த இதழ் 16 பக்கங்களுடன் 3 அணா விலையில் வெளி வருகிறது. அடுத்த இதழிலிருந்து "கைத்தறி" வழக்கம் போல் 24 பக்கங்களுடன் வெளி வரும்.

— ஆசிரியர்.

A 1605, தோப்புப்பட்டி சாலியர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

அம்பலப்புளி பஜார் :: இராஜபாளையம் P. O.

கைத்தறி ஜவுளிகள்! உயர்ந்த தரத்தில்! குறைந்த விலையில்!

எங்கள் சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் 50x12 காடாபீஸ், ஷர்ட்டிங்பீஸ், நேருஷர்ட்டிங், வேஷ்டி, துண்டு ஆகிய ரகங்கள் மொத்த வியாபாரிகளுக்கும் சில்லரை வியாபாரிகளுக்கும் மிகவும் மலிவான விலையில் கொடுக்கப்படும்.

தங்கள் தேவைகளுக்கு முந்துங்கள்.

ஆ. வைத்திலிங்கம், பிரஸிடெண்ட்.

நாட்டுச் செய்தி

நெசவாளர் காங்கிரசின் புதிய யோசனை !

தமிழ் நாடு நெசவாளர் காங்கிரஸ் அண்மையில் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில், கைத்தறி ஜவுளி வர்த்தகம் சம்பந்தமாக ஒரு புதிய யோசனையை முன் வைத்திருக்கிறது. அதில்; நெசவாளர் கூட்டுறவு ஸ்தாபனங்களின் கீழ் வேலை செய்யாத நெசவாளர்களில் சுமார் 5 லட்சம் கைத்தறி நெசவாளர்கள் மாஸ்டர் வீவர்களின் கீழும், பாக்டரி சொந்தக்காரர்கள் கீழும் வேலை செய்வதாகவும் அவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட துணியை விற்பனைசெய்ய இன்று முடியாமல் போய் சரக்குகள் பெருவாரியாக தேக்கமேற்பட்டிருக்கிற தென்றும், இந்தத் தேக்கத்தைகரைக்க அவ்வுற்பத்தியாளர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் போதிய—லாபகாமான பலனளிக்க முடியாமல் நஷ்டத்தை உண்டாக்குவதால் பலர் திவாலாக நேருகிறதென்றும், எனவே அந்த உற்பத்தியாளர்களை ஒன்றாகத்திரட்டி கார்பரேஷன்களாக அமைத்து அவர்களுக்கு வர்த்தகத்துறையில் பாதுகாப்பு அளிக்க சர்க்கார் முன்வர வேண்டு மென்றும் வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

மேலும் அப்படி அமைக்கப்படும் கார்பரேஷன்களின் நிதிவசதிக்கு சர்க்கார் பாங்குகள் மூலம் கடன் வசதி செய்து தரவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் அவ்வாலோசனையில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ் நாடு நெசவாளர் காங்கிரசின் இந்த ஆலோசனையை நாம் மனப் பூர்வமாக ஆதரிக்கிறோம்; இதை ஏற்று அமல் நடத்தசர்க்கார் முன் வரவேண்டு மென்று வற்புறுத்தவும் செய்கிறோம்.

இன்று இந்த ராஜ்யத்திலுள்ள சுமார் 8 லட்சம் கைத்தறிகளையும் எடுத்த உடனேயே ஒரு கூட்டுறவு இயக்கத்தினுள் கொண்டு வந்து விடமுடியாது என்பது தெரிந்ததோர் உண்மையாகும். ஆகவே, கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் மட்டும் நிவாரணம் பெற்று விட்டால் போதாது. அவ்வியக்கத்தினுள் வராத இன்னும் பல லட்சக்கணக்கான ஏழை நெசவாளர்களும்—அவர்கள் மாஸ்டர் வீவர்களுக்கு கீழோ அல்லது பாக்டரி முறைகளின் கீழோ வேலை செய்தாலும் நிவாரணம் பெற்றாக வேண்டும். அதற்குள்ள வழியைத் தான் நெசவாளர் காங்கிரஸ் மேற்கண்ட முறையில் காட்டியிருக்கிறது.

எனவே, கார்பரேஷன்களாகச் சேர முன்வரும் கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்களின் முயற்சியை சர்க்கார் ஆதரித்து, அவர்கள் கீழ் வேலைசெய்யும் தறிகாரர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், அவர்களின் மாதமொத்த உற்பத்திப்பொருளின்-துணியின் விலை மதிப்பைக் கொண்டு பாங்குகளைக் குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்துதவ வேண்டுமெனச் சர்க்கார் உத்திரவு செய்ய முன்வரக் கோருகிறோம். இப்படிச் செய்வதின் மூலம்தான் கூட்டுறவு இயக்கத்தினுள் வராத—உடனடியாகக் கொண்டுவரமுடியாத சுமார் 5 லட்சம் நெசவாளர்களுக்கும், அவர்களைப் பல்லாண்டுகளாக வைத்து தொழில் செய்து வந்த உற்பததியாளருக்கும் நிவாரணமளித்ததாக இருக்கமுடியு மென்பதையும் ராஜ்ய சர்க்காரின் கவனத்திற்கு நாம் கொண்டுவருகிறோம்.

கைத்தறி ஜவுளியை பகிஷ்கரிக்க சர்க்கா சங்கத் தலைவர் வேண்டுகோள் !

"உடை விஷயத்தில் மில்லில் தயாரித்த துணி அல்லது மில் நூலால் தயாரிக்கப்பட்ட (கைத்தறி) துணி முழுதும் பகிஷ்காரம் செய்யப்பட வேண்டும். அதற்குப்பதிலாக சர்க்காசங்கத்தினால் அத்தாட்சி பெற்றதோ அல்லது சுயதேவைப் பூர்த்திக் கதரோ தான்—உபயோகிக்க வேண்டும்."

என்று அகில பாரத சர்க்கா சங்கத் தலைவர் ஸ்ரீ தீரேந்திர மஜூம்தார் அவர்கள் ஒரு கட்டுரையில் வற்புறுத்தியுள்ளார். இக்கட்டுரையைத் தமிழில் மொழி பெயர்த்து மாஜி காங்கிரஸ்

உத்திரவாதமான கெட்டிச்சாயம்
தோய்ப்பவர்கள்

மதராஸ் கைத்தறி
நெசவாளர் மாகாண
கூட்டுறவு சங்கத்தாரால்
அங்கீகாரம் பெற்றவர்கள்

வரதராஜ் & கோ
சாயத்தொழிற்சாலை
மீன்கரைரோடு, பொள்ளாச்சி.

அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் தனது "பாரத தேவி" பத்திரிகையில் (3—6—52 தேதியது) வெளியிட்டிருக்கிறார்.

தேசீய விடுதலை இயக்கத்தின் தந்தை காந்திஜீ அவர்கள் கூட சொல்லத்துணியாத இந்தவார்த்தையை அவரின் வாரிசுகள் சொல்ல ஆரம்பித்திருப்பது கேட்க நாம் அஞ்சுகிறோம். கைத்தறி நெசவுத் தொழிலின் வளர்ச்சி, சுதர்த் தொழிலுக்கு ஒரு பெரிய தோல்வியை அளித்திருப்பதையே மேற்படி வாக்கியங்கள் காட்டுகின்றது என்றாலும் பொருப்புள்ளவர்கள் கூறும்—எழுதும் வார்த்தைகளாக அது இல்லையென்பதை நம்மால் கூறுமல் இருக்க முடியவில்லை.

அண்மையில் பெங்களூரில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மகாசபைத் தீர்மானத்திற்கு எதிராக - கைத்தறி நெசவுத் தொழிலுக்கு ஆக்கமளித்து வளர்க்க வேண்டுமென்ற அந்த முடிவுக்கு விரோதமாக ஸ்ரீ தீரேந்திர மஜூம்தார் எழுதுகிறார் எனில் இதைக் கண்டிக்க காங்கிரசின் தலைமை முன் வரவேண்டுமென இந்த ராஜ்ய கைத்தறி நெசவாளர்கள் சார்பாக நாம் வற்புறுத்துகிறோம்.

சாய அச்சுத் தொழில் செய்ய மேலும் மில்களுக்குச் சலுகை!

பம்பாய் ஜவுளிக் கமிஷனர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், மில்களுக்கு மில் துணியை சாய மிடவும், அச்சிடவுமான சலுகையை விஸ்தரிப்பதென இந்திய சர்க்கார் முடிவு செய்திருப்பதாக அறிவித்துள்ளார்.

மில்கள் தங்களின் துணி உற்பத்தியில் இவ்வளவு சதமான கெஜங்கள் தான் சாய மிடுதலோ அன்றி அச்சிடுதலோ செய்யலாம் என்று ஏற்கெனவே இருந்துவந்த அளவு கட்டுப்பாடுகளையும் ரத்து செய்து விடுவதெனவும் இந்திய சர்க்கார் முடிவுசெய்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது ஏற்கனவேயே மில்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தும் மேலும் இது போன்ற ஒரு சலுகையை அளிக்க சர்க்கா முன் வந்துள்ளதற்குக் கூறும் காரணம் "தேங்கியுள்ள துணிகளை மில்கள் பைசல் செய்வதற்காகவே மேற் கண்ட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன" என்று சொல்லப்படுகிறது.

தவிர, "மில்கள் சேலைகளுக்கு சாயம் போடுவது அனுமதிக்கப்படுவதாகவும்" அவ்வறிக்கை கூறுகிறது. இப்படியாக இச்சலுகையின் மூலம் மில்கள் தங்களது உற்பததியில் 40 சதம் சாயம் தோய்த்தல், அச்சிடுதல் வேலைகளுக்கென்று உபயோகித்துக்கொள்ள முடியும் என்று அறிய வருகிறோம். இது முன்பு 20 சதமாக இருந்து வந்தது என்றும் தெரிய வருகிறது.

இந்த சலுகையை சர்க்கார் மில்களுக்கு அளிக்க முன் வந்த போது, தேசத்தின் மற்ற பகுதிகளில் உள்ள சாய, அச்சுத்தொழில்களை பாதிக்கிறதா இல்லையா என்பதை ஆலோசனைசெய்ததாக தெரியவில்லை. குறிப்பாக சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் இந்தியசர்க்காரின் இந்த உத்திரவு பெரிய பாதகத்தையே உண்டுபண்ணும் என்பதை நாம் எடுத்துக்காட்டியாக வேண்டியிருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் துணியின் மீது அச்சிடும் தொழில் பெருவாரியாக கையாலேயே செய்யப்படுகிறது கிட்டத் தட்ட இது ஒரு குடிசைத் தொழிலாகவும், இதை நம்பிப் பல்லாயிரம் பேர் குடும்பம் நடத்தியும் வருகின்றனர் என்பதுயதார்த்தஉண்மை. ஏற்கெனவேயே மெஷின் பிரிண்ட் முறை இந்த ராஜ்யத்திற்கு வந்ததினுல் பாதகமேற்பட்டுவிட்டதாக கையால் அச்சிடுபவர்கள் நினைக்கின்றார்கள். அதோடு மேற்கொண்டு இந்த ராஜ்யத்தில் புதிதாக துணி அச்சிடும் இயந்திரங்களைப் பொருத்தித் தொழில் செய்ய அனுமதிக்கக் கூடாதெனவும் அவர்கள் தங்களது மாகாண மகாநாட்டிலே தீர்மானம் கூட நிறைவேற்றியிருக்கின்றனர். அந்தத் தீர்மானத்தின்மீது மத்திய சர்க்காரையும் அ.இ. டெக்ஸ்டைல் கமிஷனரையும் பேட்டி கண்டு விவாதித்துமிருக்கின்றனர்.

[9-ம் பக்கம் பார்க்க]

ஸ்ரீவில்லிபுத்தூர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்; No. A. 1601, ஸ்ரீவில்லிபுத்தூர்.

எங்களிடம் 20s x 26s நூலில் தயாரித்த 30" x 16 கெஜம், 50" x 12 கெஜம் காடா பீசுகளும், 4 x 8 வேஷ்டி மடிகளும், 36s x 40s நூலில் தயாரித்த 2 x 8 வேஷ்டி ஜோடிகளும், 50" x 12 கெஜம் பீசுகளும், 45" x 7 கெஜம் பல கலர்களில் பட்டுப்பேட்டுப் போட்ட சேலைகளும் ஏராளமாக எப்பொழுதும் கிடைக்கும்.

தற்சமயம் விலைகள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன.

தேவைக்கு எழுதுங்கள்! **முன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம்**

A. K. ஞானியார், செயலாளர். பெ. குருசாமி, தலைவர்

பிச்சைக்காரி மீனா

ச. குணவரசு.

மொட்டு மலர்ந்தது

பிச்சைக்காரி மீனாட்சியின் வாழ்வில் இன்றையப் பொழுது தெருப் பொறுக்கிக் கொண்டே முடிந்துவிட்டது. உலகம் இருண்டு ஊடே எவ்வளவோ நடந்து மறுநாளும் உதித்து விட்டது.

சென்னைப் பட்டணத்தின் மளிகைக்கடை வீதியிலே வரிசை வரிசையாக வண்டிகள் நிற்கின்றன. தினசரி, அதில் பல சரக்குகள் ஏறிக்கொண்டும் இறங்கிக் கொண்டுமிருக்கின்றன. மீனாள், பிச்சையெடுக்கும் முறை, வீடு வீடாகச் சென்று—கடைகடையாகப் போய் நின்று காசுபணங் கேட்கும்முறையல்ல. ஆங்குள்ள வண்டிகளுக்குக் கீழே சிந்திக் கிடக்கும் சிறுகடலை, பயறு போன்ற தானியங்களைப் புழுதியோடு புழுதியாய்ப் பெருக்கி 'முறத்'தில் கொட்டி நன்றாகப் புடைத்து பொறுக்கிச் சுத்தஞ் செய்து, தனக்குச் சாப்பாட்டிற்குத் தகுந்ததாக ஏதாவது அந்தத் தானியத்திலே இருந்தால் அதைமட்டும் ஒதுக்கித் தனியே எடுத்து வைத்துக்கொண்டு, மற்றவைகளை 'பிளாட்பாரத்தில்' பலகாரம் சுட்டு விற்கும் பெரிய மனுஷிகளிடத்தில் விலைக்குக் கொடுத்துக்காசாக்கிக்கொள்வது வழக்கம். இத் திட்டத்தை மீனாள், கப்பலில் சரக்கு ஏற்றுமதி செய்யுமிடங்களிலும், ரேஷன் கடை வாசல்களிலும் அமுல் நடத்துவாள். இது அவளுடைய அன்றாட வேலைத் திட்டம்

தான் யாரென்றுகூட மீனாளுக்கு நன்றாகத் தெரியாது. தான் சிறு பிள்ளையாக இருந்தபோது, அதாவது மீனாளுக்குச் சரியாக விவரந்தெரியும் வயது வருவதற்குமுன்னாலேயே தனது தாயார் இறந்து விட்டதாக நினைவிருந்தது. தனது தாயாரும் இத்தொழிலைத்தான் நடத்தி வந்தாள். மீனாளும் தாயின் வழியைப் பின்பற்றி நடக்கிறாள். ஆனால், ஒன்றுமட்டும் மீனாளுக்கு நினைவிருந்தது. தங்களுடைய வம்மிசம் நெசவாளர் வம்மிசம் என்றும், பஞ்சம் பிழைப்பதற்காக தன்னைத் தன் தாயார் கூட்டிக்கொண்டு பட்டணத்தற்கு வந்ததாகவும் அவளுக்கு நன்றாக நினைவிருந்தன. இந் நாட்டில் வாழப்பிறந்த — வாழ வேண்டிய கை நெசவாளர்கள் இந் நாட்டுத் தலைநகரிலேயே பிச்சை எடுக்கிறாரே என்ற உணர்வும், நினைவும் அவளுக்கு இருந்தன.

மீனாள் பருவம் அடைந்துவிட்டாள். மொட்டாக இருந்தது மலர்ந்து விட்டது. சில மாதங்களும் சென்றுவிட்டன. அவள் நிறம் கார் முகில் வண்ணனான கண்ணனின் நிறந்தான், ஆனாலும் கட்டுமஸ்தான உடல். யாரிடமும் சரசமாகப் பேசுவாள். இருந்தாலும் சல்லித்தனமாக நடக்க மாட்டாள். அன்பாகப் பேசுவாள், ஆனால் எந்த ஆடவர் மீதும் ஆசைப்பட மாட்டாள். மௌனமாக இருப்பாள், ஆனால் மண்டூகம் கிடையாது. ஆராய்ச்சியோடு நோக்குவாள், ஆனால் ஆபாச எண்ணங்களுக்கு இதயத்தில் இடந்தர மாட்டாள். அழகாகவே இருப்பாள், ஆனால் தலை சீவாமலும் எண்ணை தடவாமலும் கொஞ்சம் அருவெறுப்பாகவே முகத்தை வைத்துக் கொள்வாள். அதாவது, யாரும் தன்மீது ஆசைப்படக் கூடாது என்பதற்காக அவ்விதம் செய்து கொள்வாள். ஏனென்றால் தனக்குக் கலியாணமாகி கணவரோடு அன்பாகப் பேசி கொஞ்சிக் கொஞ்சிப் பழகி ஆனந்தமாக வாழ்வு நடாத்த வேண்டுமென்பதே அவள் எண்ணம். அதற்காகவே, பணக்கார மைனர்களின் கண்பார்வை தன்மீது பட்டுவிடக்கூடாதே, பாழாக்கிப்போடுவரே, பின் பாசி படிந்த குட்டையாகி விடுமே தன் வாழ்வு என்பதற்காகச் சிலசமயம், தன் உடலை மிகவும் அசுத்தமாகக்கூட வைத்திருப்பாள்.

கன்னியானவுடன் பெண்களின் கருத்தில் உலவிடும் சந்தோஷ—சங்கோச எண்ணங்கள் மீனாளின் இதயத்திலும் மிதந்தன. தான் வளர்க்கும் கோழியை பக்கத்து வீட்டுச் சேவல் துரத்திப் பிடித்து அதன் கொண்டையைக் கவ்விக்கொண்டு மிதிக்கும். இது, மீனாளுக்கு முன்பு விளையாட்டாகத் தெரியும்; இப்பொழுது வேதனையூட்டுவதாகப் படும்.

அன்று இரவில் நித்திரைக்குப் போம்போது மீனாளின் பிச்சைக்கார உள்ளத்திலுங்கூட வாலிப உணர்ச்சிகள் பின்னிக் கிடந்தன. பொதுவாக வாலிப

இதயத்தில் ஊறும் எண்ணங்கள் சந்தோஷமாக ஆரம்பித்து சங்கடப்பட்டுக்கொண்டே இருக்கும். தனது மூங்கில் மரக் கயிற்றுக் கட்டிலில் மீனாள் படுத்தாள்.

கனவில் கிடைத்த களிப்பு

ஓடையிலே வேகமாக வளைந்து வளைந்து செல்லும் தண்ணீர் மேலும் கீழுமாகப் புரண்டு புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அந் நீர்ச் சுழலில் மீனாள் அகப்பட்டிருந்தாள். எங்கிருந்தோ வந்த வாலிபன் ஓடை நீரில் நீந்திச் சென்று மீனாளைக் கைப்பற்றி இழுத்துத் தூக்கிக் கொண்டு வந்து கரை சேர்த்தான். மேலும் தன் இருகரங்களாலும் மீனாளைச் சக்கரத்தில் வைத்துச்சுற்றுவது போல் சுற்றி அவள் உட்கொண்டிருந்த நீரையெல்லாம் கக்கும்படி செய்து மீனாளைக் காப்பாற்றினான்.

அவள் தன் உணர்வு வரவும் தன் எதிரேயிருக்கும் காளையை எந்த அர்த்தமும் இல்லாமல் பார்ப்பதுபோல் ஏறிட்டுப் பார்த்துவிட்டு ஏதும் புரியாதது போல்நகர்ந்தாள். ஆனால், இருக்கும் நிலையிலிருந்து எல்லா விவரமும் புரிந்துதானிருந்தாள்.

“எமன் கையிலிருந்து உன்னைக் காப்பாற்றியிருக்கிறேன்; ஏதும் கூறாமல் கூசாமல் போகிறாயே” என்றான் அந்தக் காளை.

மீனாள், புரியாதது போல் நீங்கள் யார்?.... மறந்து விட்டேன், மன்னிக்கவும், நீங்கள் செய்த உதவிக்கு மிக்க நன்றி ....ம்....சரி, வருகிறேன்....” எனக்கூறி மறுபடியும் நகர்ந்தாள். ஆனால், என்ன சொன்னோமென்று மீனாளுக்கே நன்றாகப்புரியவில்லை இப்பொழுது மீனாளின் கால்கள் அடிஎடுக்கவரவில்லை. நின்ற இடத்திலேயே ஊன்றி விட்டன போல்த் தெரிந்தன. திரும்பிப் பார்த்தாள் அவ்வாலிபனை. அந்த இளைஞனின் கண்கள், மீனாளின் உடலிலுள்ள ஒவ்வொரு அங்கங்களின் அழகையும் அதில் தோய்ந்திருக்கும் கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பையும் தாராளமாகப் பருகிக்கொண்டிருந்தன!

கருமை நிறமாயிருந்த தனது உடல், பொன்மெருகேறியது போல் மீனாளுக்குத் தோன்றியது. அவள் முகம் மகிழ்ந்து பொலிவு பெற்றது. விழிகள் மருண்டன. அவள் வெட்கித் தலை குனிந்து கொண்டாள். ஒரு கன்னியை, ஒரு காளை தன் இரு கண்களாலும் இமைகளை அசைக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தால் எந்தப் பெண்ணுக்குத் தான் நாணம் ஆட்சி புரியாமல் விட்டு விடும்?

மீனாளின் கண்கள் புல்வெளி நிறைந்த தரையை நோக்கின. அதன் பசுமை நிறம் அவளைப் பார்த்து புன்முறுவல் செய்வது போல் அவளுக்குத் தோன்றியது. காளை தனது பார்வையைக் கட்டுப்படுத்துவதாக இல்லை. தன்னைப் பார்த்து விட்டுத் தரையை நோக்கிக் கொண்டிருக்கும் மீனாளின் கண்களில், காளையின் உருவம் சொக்கியிருந்தன. ஆனால் மீனாளின் உள்ளம் பொறுத்திருக்கும் ஆற்றலிழந்தது. கொஞ்சம் மறுபடியும் நோக்கினாள். கண்களின் கடையோரமாகக் கள்ளத்தனமாகச் சென்ற மீனாளின்பார்வை, காளையின் பார்வையிலே பட்டுத் தெறித்தது! ஆனால், மீனாளின் அகத்தில் நாணம் உச்ச நிலை அடைந்துவிட்டது. அவனைப்போல் அவளால் பார்த்துக் கொண்டே நிற்க முடியவில்லை. மீனாளின் உடல், தெப்பத்து நீரிலே மிதக்கும் திங்கள், இளந்தென்றலினால் அசைவது போல் லேசாக நெளிந்தது; அவள் தலை கவிழ்ந்தது; கண்கள் தரையை நோக்கின; மீனாள் தன்னையுமறியாமல் தன் செவ்விதழ்களிலே சிறுநகை புறிந்து நின்றாள்!

ஆ! என்ன அதிசயம்! ஒரு பெண்ணின் கண்களுக்கு இத்தகைய சக்தியா! கூற்றுவன், உயிர் கொல்லும் குணமுடையவன் எனக் கேட்டிருக்கிறோம். ஆனால், இக்கண்கள் அதைவிடக் கொடிதாய் இருக்கின்றதே! நம்மோடு எதிர்த்துத் தனது கூர் பொருந்திய பெரும் விழிகளைக் கொண்டு போர் அல்லவா செய்கிறது! ஆ! என்னே! நல்ல வேலை; கொடிய புருவம்

பாதிக்கண்களை மறைத்து கொஞ்சம் கொடுமையைக் குறைத்துவிட்டன. காளை, தனது பார்வையைக் கடிவாளம் போட்டு இழுத்து, அடுத்தாற்போல் வானுறவோங்கி வளர்ந்திருக்கும் மலை முகட்டிலே, வானத்தைச் செந்நிறமாக்கிச் சென்று கொண்டிருக்கும் கதிர் மீது செலுத்தினான்.

மீனாளின் மாணிக்க உதட்டில் மின்னும் புன்னகையின் ஒளி அந்தச்சிலம்பைக் காட்டிலும் செந்நிறமாயிருந்தது காளையின் கண்களை மறுபடியுங் கவர்ந்தது; மீனாளின் உடல் அவன் கண்களுக்கு மறுபடியும் விருந்தளித்தது. ஆனால், நெஞ்சில் வேதனைதான் மிகுந்தன. “கூற்றுவனிடமிருந்து உன்னை காப்பாற்றினேன்; அதற்கு நீ உதவி செய்யக்கூட வேண்டாம்: ஆனால் உபத்திரவமில்லாமலாவது இரு. உன் கண்கள், வளைந்து கொடுத்த வில் எய்த வாளியாகி என்னைக் கொல்கிறதே” என்றான் காளை,

என் சம்மதமின்றி என்னை ஏன் காப்பாற்றினீர்கள்? நீங்கள் சும்மா இருந்தாலும் நான் சுகித்திருப்பேனே? உங்கள் வெறித்த பார்வையும் வேதனையூட்டும் சொற்களும் என்னையுங் கொல்லத்தானே செய்கிறது? இந்த உயிர் வதைக் கஞ்சித்தான் ஓடையிலே வீழ்ந்தேன்! மறுபடியுங் குதித்து நான் அமைதியாய் போகிறேன் ...நீங்கள் அல்லற்பட்டுக் கொண்டேயிருங்கள்” என்றாள் மீனாள். அவள் முகத்தில். நகையும் காதலின் நயமும் மாறி மாறி நர்த்தனமாடின.

“உன்மீது இரங்கிக்காப்பாற்றினேன்! நீ என்னை இடர் செய்வதுமல்லாமல் ஏன் என்றுங் கேட்கிறாய். சரி அந்த எமலோகத்திற்கே செல்” எனக் கூறிக்கொண்டு தன்தடக்கை களால் தாவிப் பிடித்தான். அவள், ஓடவும் முடியாமல் நிற்கவும் முடியாமல் திகைத்து நின்றாள். பின் திருடனைப்போல் நழுவினாள். ஆனால், அவள் கண்களின் இமைகள் இடுக்கிப்பார்த்துஇனிமை தருவதும், இதழ்கள் நெளிந்து நகையூட்டிக்கனிவு தருவதும் மட்டும் நிற்கவில்லை! புலவருக்குத்தமிழ்தரும் இனிமையெல்லாம் அவள் புன்னகை அவனுக்கு அளித்துக் கொண்டே இருந்தன!

ஓடையினிற் புரண்டோடும் வெள்ளத்தை அதன் இருகரைகளும் அணைத்திருந்தன. அந்த அணைப்பின் மகிழ்விலே ஆனந்தமாக இரைந்து கொண்டு தன்னை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் உழவரின் உள்ளத்தை களிப்பூட்டச் சென்று கொண்டிருந்தன, தண்ணீர்-

அந்த வெள்ளப் பெருக்கில் அவளை எரிந்து விடுவதாக எட்டிப் பிடித்தான்; இறுக்கித் தூக்கினான். அப்பசுங்கொடி காளையின் தோளிலே துவண்டாள். அவளுக்குத் தன் உடல் முழுதும் கள் வெறி ஏறியதுபோல் இருந்தன; உள்ளம், மகிழ்வு மேலிட்டு மயங்கியது; உயிர், காளையின் உயிரிலே போய்ப் பின்னின!

கதிர் மறைந்த உடன், உலகை இருள் வந்து சூழாதிருக்க மதி எழுந்தான்; அதன் ஒரு பகுதியைக் கார் வந்து மறைத்தது.

சரிந்திருந்த கருங்குழல், அவள் சந்திர முகத்தை மறைத்தது காளையின் விரிந்திருந்த கரங்கள் அதை விலக்கி விட்டு, அவள் கன்னத்தில் விளையாடின. தமிழைப் படித்து அதன் இனிமையைப் பற்றி பேசிப் பேசி அதில் விளைந்த இன்பத்தைச் சுவைத்த, அவன் இதழ்கள், அக் கன்னியின் தாமரைக் கன்னத்திற் குவிந்து குவிந்து விரிந்தன.

முகில், வானில் தோன்றிய மதியை முழுதும் மறைத்த பின் மலையின் முடியை வந்தணைத்தது, அதைக் குளிர் காற்று கூடியது, கார் கனிந்தது, அதில் நீர் சுரந்தது; நெடும்பூமி நனைந்தது.

காளையின்பிடியிலிருந்தமீனாள், “மழை, மழை” எனக் கூறித் திமிறிக் கொண்டோடினாள்.

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

சென்னிமலை P. O.

எங்களிடம் 20 நெ. முதல் 30 நெ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களால் தயார்செய்த 5, 6, 7, 7½ கெஜம் 42, 44 அங்குல அகலங்களில் கலர் சேலைகளும், வேஷ்டி, துண்டு, காடா பீஸ் ரகங்களும்

விலை சரசமாய்க் கிடைக்கும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L. தலைவர்.

சின்னக் குடிசையில் சிங்காரமாக கயிற்றுக் கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த பிச்சைக்காரி மீனாளின் உதடுகள் அசைந்தன; 'மழை மழை' என்ற வார்த்தைகள் அதிலிருந்து எழும்பின. கட்டிலிலிருந்து புரண்டு கீழே விழுந்தாள், மீனாளுக்குத் தான் இதுகாறும் அனுபவித்த இன்பங்கள் கனவு தானா? என்ற ஏக்கம் அவள் முகத்தில் படர்ந்திருந்தன. அக் காட்சிகள் அவள் கண்ணெதிரே வந்து நின்றன. சற்று நேரம் தன்னை மறந்து இரவின் கனவை நினைந்து மகிழ்ந்து மயங்கிக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் சந்தோஷ ரேகைகள் சதிராடி நின்றன.

'கொக்கரக்கோ' எனக்கூவும் சேவலின் குரல் கேட்டுக் கூடைக்குள்ளிருக்கும் தனது கோழி கொக்கொரித்தது. கூடையைத் திறந்து விட்டாள்; கோழி ஓடியது; அதைத் துரத்திக்கொண்டு பின்னோடியது சேவல்.

கடைவீதியில் உதவிய காளை.

அன்று மீனாள் வீட்டுக் காரியங்களைச் சுறு சுறுப்பாகவே செய்தாள், எதைத் தொட்டாலும் என்ன வேலை செய்தாலும் தான் கனவில் கண்ட காளையின் உருவம் தோன்றி ஊக்கமளித்துக் கொண்டேயிருந்தன. முறமும் பெருக்குமாரும் ஏந்தியபடி கடைவீதிக்கு வந்தாள், ஒவ்வொரு வண்டிக்குக் கீழேயும் சிந்திக் கிடக்கும் தானியங்களைப் பெருக்கினாள்; முறத்தால் புடைத்தாள்; முந்தியிலே கொட்டினாள். உள்ளம் உவகை கொண்டிருக்க உடல் எறிந்த பந்து போல் எழும்பியெழும்பிக் குதிக்க ஓட்டமும் ஒய்யாரமுமாக நடந்தாள். ஒவ்வொரு வண்டிகளையுங் கடந்து கடைசி வண்டிக்கு வந்து விட்டாள். அவ் வண்டிக்குக் கீழே, மாட்டின் கால்களுக்கும் சக்கரத்திற்கும் இடையே கொஞ்சம் நெல் மணிகள் புழுதியிற் படிந்து கிடந்தது தெரிந்தது. ஆவலாக, அவசரமாக ஓடி வந்தாள்; விரைவாகப்பெருக்கினாள். பெருக்கிய அவசரத்தில் மீனாளின் கையிலிருக்கும் விளக்குமார் காளைமட்டின் கால்களில் பட்டு விட்டது. மாடு கொஞ்சம் நகர்ந்துவிட்டது. அவ்வளவுதான். மீனாளின் இடதுகை மணிக்கட்டு சக்கரத்தின் அடியில் அகப்பட்டுக்கொண்டது. "ஆ.... ஐயோ" என அலறி விட்டாள். அவளால் தனது கையை எடுக்க முடியவில்லை.

மீனாளின் பரிதாப நிலையை அங்குள்ளோர் எவருடைய கண்களும் கவனிக்கவில்லை. எல்லோரும் தத்தம் வேலையிலீடுபட்டிருந்தனர். பிச்சைக்காரிதானே தெருப் பொறுக்கிதானே என்று ஏளனமாக இருந்துவிட்டார்களோ என்னவோ? தெரியவில்லை.

உலகம் எப்பொழுதும் இப்படித்தான்; கஷ்டப்படும் ஏழையின் துன்பங்கள் கனதனவான்களுக்குத் தெரியாது; அவனைப் போன்ற ஏழையால்தான் அத் துன்பத்தை அறிய முடியும்.

அந் நேரத்தில் அவ்வீதி வழியே ஒரு வாலிபன் அசைந்தசைந்து நடந்துகொண்டு போனான். அவன் சிவப்புத்துணியிலே ஒரு சட்டை போட்டிருந்தான். வேட்டியும் அணிந்திருந்த சட்டையும் அவன் உடலும் அழுக்கேறியிருந்தன. முகத்தில் நறுக்கப்பட்ட வேலி போல் ரோம அரும்புகள் முளைத்திருந்தன. அவனைப் பார்க்க, வளமான பயிர் வாடியிருப்பது போல் கொஞ்சம் மெலிவாகக் காணப்பட்டான். அவன் முகத்திற் காணப்பட்ட சோகமும், நடையிலிருந்த சோர்வும், உடையிலிருந்த எளிமையும் அவன் ஓர் ஏழை என்பதையும், வாழ்க்கையில் கஷ்டத்தை நன்கு அனுபவித்த ஓர் உழைப்பாளி என்றும் அவனது தோற்றமே காட்டியது.

கண்ணைக் கவரும்
* எண்ணற்ற *
கைத்தறி ஜவுளிரகங்கள்
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்குமிடம்
காமதேனு டெக்ஸ்டைல்ஸ்
ஈஸ்வரன் கோவில்தெரு-ஈரோடு.

அந்த வாலிபனின் செவிகளிலே மீனாளின் அலறல் கேட்டது. பிறர் படுந்துயர் கண்டு, தன் வாழ்வில் சுகத்தைக் காணாதவர் தான் அதிகமாக இரங்குவர். ஏன்? அவர்களும் தங்கள் இனமாக இருப்பதால்தான். 'இனம் இனத்தோடு சேரும்; பணம் பணத்தோடு சேரும்' என்பார்களே, அதுபோல, துன்புறுவோன், துன்புற்றவனினத்தைத்தான் சேரமுடியும்; இன்பபுரிவாசிகள் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்களே! ஏழையின் அலறல் ஏழைக்குத்தானே கேட்கும்; பணக்காரர்கட்குக் கேட்காதே.... கேட்க முடியாதே! அவ் வாலிபன் உடனே விரைந்து சென்று தன் முழுப்பலங் கொண்டமட்டும் வண்டிச் சக்கரத்தை முன்டித் தள்ளினான். மெலியோர், வலியோரால், மிகு துன்புறும் போழ்து வாழ்வை வெறுத்து அவர்கள் மீது தாக்கினால், வலியோருங்கூடக் கொஞ்சம் வளைந்து கொடுக்கத்தான் செய்வர். ஒடுங்கியிருந்த அவன் தோள்களில் எங்கிருந்துதான் அவ்வளவு பலமும் வந்தது எனத் தெரியவில்லை! சக்கரம் பின்னால் கொஞ்சம் நகன்றது மீனாள், கையை வெடுக்கென்று எடுத்து விட்டாள்.

(அடுத்த இதழில் முடியும்)

என்ன நீதி?

சு. அரசு.

1

அன்றொருநாள் பணிமனையில்
அலுவல் தீர்த்து
அலுப்புடனே அகம் நோக்கி
நடக்கும் போது
தென்றலுடன் மிதந்து வந்த
குரலைக் கேட்டுத்
திடுக்கிட்டு நடை நிறுத்தித்
திரும்பிப் பார்த்தேன்
குன்றினைப்போல் ஒரு மனிதன்
குழந்தை ஒன்றை
கோல் கொண்டு அடித்திட்டான்
அலறிற்றந்தோ!

2

அலுப்பென்னும் திரை விலகி
இரக்க மென்னும்
அன்புணர்ச்சி தோன்றிடவே
ஓடிச் சென்று
களிப்புடனே நின் றிருக்கும்
கூட்டம் நீக்கிக்
கதறியழும் குழந்தை செய்த
குற்றம் கேட்டேன்
பளிச்சென்று பதில் கொடுத்தார்
அடித்து நின்ற
பங்கீட்டுக் கடைக் காரர்
என்னைப் பார்த்து

3

"பிச்சைக்கு வந்த திந்தத்
திருட்டு நாய்தான்
பின் திரும்பி நானிருக்கும்
வேளை பார்த்து
அச்ச மின்றி அரிசிதனை
அள்ளி வாயில்
அரைப்படிக்கு மேல் கொட்டி
நகரும் போது
எச்சிற்கலை செய்த செய்கை
தன்னைக் கண்டு
இழுத்து வந்து கொடுத்திட்டேன்
உதை" தானென்றார்

4

உள்ளமது கொதித்திடவே
குழந்தை தன்னின்
உடலதனைப் பார்த்திட்டேன்
ரத்தக் காயம்.
"அள்ளும் பசிதனைத் தணிக்க
அரிசி தன்னை
அள்ளியது குற்ற மேனும்
சமூகந் தன்னில்
கொள்ளை யதே தொழிலாக
வாழ்வோர் தம்மைக்
கொடை வள்ளல் என்றழைப்ப
தென்ன நீதி?"

5

என்றென்வாய் முணு முணுக்க
எதிரிலுள் ளோர்
ஏளனமாய் எனை நோக்கி
முருவல் செய்ய
நன்றியுடன் எனைப் பார்த்த
குழந்தை கையில்
நான்கு அணாத் தந்துவிட்டு
நடை தொடர்ந்தேன்
நின்றிருந்த கூட்ட மெனைப்
"பித்த" னென்றே
நீதிக்குத் துரோகம் செய்து
ஏசிற் றங்கே!

Edited & Published by: M. K. Swamy at 19/22. Muthanankulam Street, Coimbatore.
Printed: at Gugan Press, 5/314, Avanashi Road, Coimbatore.